**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE,**

**DINDIGUL.**

**C.C. 199/2025**

**Prosecution Witness : 6**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | **திரு. மாரிமுத்து** | **Caste** | : | |
| **Father's Name** | : | **திரு. சண்முகம்** | **Calling** | : | **சிறப்பு சார்பு ஆய்வாளர், திண்டுக்கல் நகர் வடக்கு காவல் நிலையம்** |
| **Village** | : | | **Religion** | : | **இந்து** |
| **District** | : | **திண்டுக்கல்** | **Age** | : | **49** |
| | | | **Dated** | : | **12.02.2026** |

**இந்திய பிரமாண வகைமுறைச் சட்டம் 1969 ( பிரிவு 4)ன்படி சாட்சிக்கு சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டு பிரமாணத்தின் பேரில் சாட்சியின் வாக்குமூலம் பதிவு செய்யப் பட்டது**

---

**எதிரி ஆஜர்.**

அ.சா. (பட்டியல் சாட்சி 11), **திரு. மாரிமுத்து** ஆஜர். சத்தியப்பிரமாணம் செய்து வைக்கப்பட்டு விசாரணை செய்யப்படுகிறார்.

<u>**முதல் விசாரணை :–**</u>

நான் தற்போது திண்டுக்கல் நகல் வடக்கு காவல் நிலையத்தில் சிறப்பு சார்பு ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். நான் இந்த வழக்கு சம்பவ காலத்தில் தாடிக்கொம்பு காவல் நிலையத்தில் தலைமை காவலராக பணிபுரிந்தபோது, 17.12.2021ம் தேதி காலை 11.30 மணிக்கு திண்டுக்கல் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் அரசு வட்டார காவல் ஆய்வாளர் அறிக்கை செய்து, தாடிக் கொம்பு குற்ற எண். 805/2021, பிரிவுகள் 279, 304(A) இ.த.ச. வழக்கில்இறந்துபோன மதன் பாலாஜி என்பவரின் உடலை பிரேத பரிசோதனை செய்வதற்காக ஊர்ப்

பஞ்சாயத்தார்கள் மற்றும் சாட்சியாளர்களின் முன்னிலையில் ஆய்வாளர் அவர்கள் விசாரணை மேற்கொண்டு, இறந்துபோன மதன் பாலாஜி என்பவரின் உடலை பிரேத பரிசோதனை செய்வதற்காக திண்டுக்கல் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை அதிகாரிக்கு காவல் ஆய்வாளர் கொடுத்த பிரேத பரிசோதனைக்கான தபாலைப் பெற்று, மருத்துவமனை அதிகாரியிடம் ஒப்படைத்து, இறந்துபோன மதன் பாலாஜி என்பவரின் பிரேதத்தினை பரிசோதனை செய்ய அவருடைய அவருடைய அங்க மச்ச அடையாளங்களை மருத்துவரிடம் காண்பித்தேன். பிறகு பிரேத பரிசோதனை முடித்து அவருடைய உடலையும், உடைமைகளையும் மருத்துவமனையில் இருந்து பெற்று, அவரது உறவினர்களிடம் சடங்குகளுக்காக ஒப்படைத்தேன். சார்பு ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

<u>**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை:–**</u>

வாய்ப்பு அளிக்கப்பட்டும் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை என்று தெரிவிக்கப்பட்டது.

**Taken down by me/before me in open court on 12.02.2026 and read over to the witness in the presence of counsel interpreted to him/her in Tamil and admitted by him/her to be correct.**

V DEEPA
Digitally signed by V DEEPA
Date: 2026.02.12 18:04:10 +0530

**Chief Judicial Magistrate,**
**Dindigul.**